# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 214/மா/2023**
**நாள் : 12.09.2023**

திரு. S. வேணுகோபால்,
சென்னை – 600 099. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 6, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொளத்தூர், வி.வி.நகர், 5வது தெரு, ஸ்ரீபாலாஜி பிளாட்ஸ், பிளாட் நெ.2, என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. வேணுகோபால் என்பவரின் 15.07.2023 நாளிட்ட மனு 17.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 214/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, கொளத்தூர், வி.வி.நகர், 5வது தெரு, ஸ்ரீபாலாஜி பிளாட்ஸ், பிளாட் நெ.2, என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. வேணுகோபால் என்பவரின் 15.07.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில்,

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். வார்டு – 66, மண்டலம் - 6, சென்னை மாநகராட்சியில் அமைந்துள்ள 50 அடி அகலமுள்ள வெங்கடேசன் சாலை, ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து 100 மீட்டர் தொலைவிற்கு 25 அடியாக குறைந்து காணப்பட்டதால், நான் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005ன்படி தகவல் கோரி 2019ம் ஆண்டு விண்ணப்பித்ததின் விளைவாக, மேல்முறையீட்டு வழக்காக SA4657/C/2019 என்று பதிவு செய்து, விசாரணையை நடத்தியதின் பேரில் நான் கோரிய தகவல்கள் எனக்கு கிடைத்ததால், 06.03.2020 தேதியில் தகவல் ஆணையம் ஆணை பிறப்பித்து வழக்கை முடித்து வைத்தது. பொது தகவல் அதிகாரி கொடுத்த தகவலில், வெங்கடேசன் சாலையில் நான்கு மனைதாரர்களால் 25 அடி முதல் 30 அடி வரை 100 மீட்டர் தொலைவிற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்றும், ஆக்கிரமிப்பை அகற்றக் கோரியும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை-5 அவர்களால், மண்டல அலுவலர், மண்டலம்-6, சென்னை மாநகராட்சி அவர்களுக்கு, 04.03.2020 அன்று கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு செய்துள்ள மனைதாரர்களின் மீது நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்பை அகற்ற 9 மாத காலமாகியும், எந்தவொரு நடவடிக்கையும் மண்டல அலுவலர், மண்டலம்-6, சென்னை மாநகராட்சி

அவர்கள் எடுக்காததால், நாள் 30.12.2020 தேதியில் வட்டார இணை ஆணையர் (மத்தியம்) சென்னை மாநகராட்சி அவர்களுக்கு ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி புகார் கடிதம் ஒன்று அனுப்பினேன். வட்டார இணை ஆணையர் (மத்தியம்) அவர்களிடமிருந்து எந்தவொரு பதிலும் 2½ மாதங்கள் ஆகியும் வராததால் நான் 23.03.2021 தேதியில் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9 மற்றும் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை -3 அவர்களுக்கு ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி புகார் கடிதம் அனுப்பினேன். புகார் கடிதம் அனுப்பி இரண்டு ஆண்டு காலமாகியும் எந்தவொரு பதிலும் வராததால் நாள்:3.7.2023 அன்று ஆக்கிரமிப்பை அகற்ற கோரி நினைவூட்டு கடிதம் எழுதி 10 நாட்களாகியும் எந்தவொரு பதிலும் வரவில்லை என்பதை தங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

பல ஆண்டுகளாக 50 அடி அகலம் கொண்ட வெங்கடேசன் சாலையை நான்கு மனைதாரர்கள் 25 அடி முதல் 30 அடி வரை 100 மீட்டர் தொலைவிற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளதை, சாலைக்கு சொந்தக்காரர்களான சென்னை மாநகராட்சிக்கு மூத்த குடிமகனாகிய நான் தகவல் பெற்று கொடுத்து, ஆக்கிரமிப்பை அகற்ற கோரி பல மாநகராட்சி அதிகாரிகளுக்கு புகார் கடிதங்கள் அனுப்பியும் இதுநாள் வரை நடவடிக்கை எடுக்காததை பார்க்கும்போது, ஆக்கிரமிப்பு, அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் செய்யப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது. சாலையின் சொந்தக்காரர்களான சென்னை மாநகராட்சிக்கு ஒரு மூத்த குடிமகன் ஆக்கிரமிப்பை உறுதி செய்தும் நடவடிக்கை எடுக்காததை பற்றி நினைக்கும்போது மிகவும் வேதனை அளிக்கிறது. மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளின் மேல் கடும் நடவடிக்கை எடுக்கவும், ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்றவும் இந்த முறையீட்டு கடிதத்தை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். தாங்கள் இந்த முறையீட்டு கடிதத்தை ஏற்றுக்கொண்டு, விசாரணை நடத்தி நியாயம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மனுவில் குறிப்பிட்ட கடிதங்களின் நகல்களை தங்கள் பார்வைக்காக இம்முறையீட்டு மனுவுடன் இணைத்துள்ளேன்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம்-6ன் உதவி செயற்பொறியாளரிடம் 03.08.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டது.**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ன் மண்டல அலுவலர் 16.8.2023 நாளிட்ட தனது அறிக்கையில்:-**

It is submitted that earlier the complainant herein had sent a Petition dated 11.02.2019 under the Right to Information Act, 2005 requesting to furnish the entire length and width of the Venkatesan Salai, Kolathur, Chennai and also requested to furnish the width of the Venkatesan Salai near the G.K.M. Colony, 10th, 11th and 12th Street as the complainant is assuming that the road in junction of the above streets have been encroached.

It is submitted that by the Greater Chennai Corporation, a reply dated 19.02.2019 was given to the complainant. Having not satisfied with the reply the complainant herein had filed an Appeal before the Tamil Nadu Information Commission.

It is submitted that since the road in question was part of the approved layout by the Tamil Nadu Slum Clearance Board now Tamil Nadu Urban Habitat Development Board. Hence, a letter dated 13.02.2020 was addressed to the Secretary, Tamil Nadu Slum Clearance Board wherein it was requested to depute the Surveyor and to earmark the boundaries of the road width in Survey No.195, Block No.32E & 41 of Peravallur Village at Venkatesan Salai and to furnish a report immediately along with the Topo Sketch and FMB in order to submit the same before the Tamil Nadu Information Commission.

It is submitted accordingly a letter dated 13.02.2020 sent to the Tahsildar, Ayanavaram Taluk requesting to earmark the boundaries of the road width in Survey No.195, Block No.32E & 41 of Peravallur Village at Venkatesan Salai and to furnish a report immediately along with the Topo Sketch and FMB in order to submit the same before the Tamil Nadu Information Commission.

It is submitted that the Managing Director, Tamil Nadu Slum Clearance Board now Tamil Nadu Urban Habitat Development Board had sent a reply letter dated 04.03.2020 by enclosing the Topo Sketch and requested to approach the Revenue Authorities viz., the Tahsildar, Ayanavaram Taluk for earmarking the encroachments made at Venkatesan Salai. It is further submitted that even though the Tahsildar, Ayanavaram Taluk has received the letter dated 04.03.2020, neither a reply nor the road was earmarked by the Tahsildar, Ayanavaram Taluk.

It is submitted that while so, the appeal filed by the complainant herein came up for hearing on 06.03.2020 and after hearing all the parties concerned and also after verifying the records, the Tamil Nadu Information Commission has closed the appeal filed by the complainant by order dated 06.03.2020.

It is submitted that due to the outbreak of the corona virus disease (COVID-19) the Government of India has declared as a pandemic in more than a dozen states and union territories, where provisions of the Epidemic Diseases Act, 1897 have been invoked, and educational institutions and many commercial establishments have been shut down. India has suspended all tourist visas, as a majority of the confirmed cases were linked to other countries.

It is submitted that the officials of Greater Chennai Corporation were engaged in the monsoon work in the months of November to December 2020 in addition to the COVID-19 relief work. Further in the month January 2021 the officials were engaged in the verification of the electoral list for the State Assembly Elections 2021 and when the elections work was about to the end the second wave of COVID-19 has hit the state of Tamil Nadu severely, I further submit that in the Month of May 2021, the Government of Tamil Nadu has declared a state wide lockdown on account of the second wave of COVID-19 corona virus disease.

It is submitted that in the meantime due to the transfer of the officials and also delimitation of the wards within the Greater Chennai Corporation, the file pertaining to the above complaint was mixed up with other files and hence, the Greater Chennai Corporation was not able to take further action.

It is submitted that, immediately on receipt of the letter from this Hon'ble Forum the file pertaining to the above issue was traced out and a reminder letter dated 12.08.2023 to the Tahsildar, Ayanavaram Taluk requesting to earmark the boundaries of the Venkatesan Salai, Kolathur, Chennai in order to take further action against the encroachments made therein.

It is submitted that after earmarking of the extent of encroachment by the Tahsildar, Ayanavaram Taluk, the Greater Chennai Corporation will take further action by removing the same after issuing notice under Section 128 of Tamil Nadu Urban Local Bodies Act, 1998.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 17.08.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 07.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 17.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சென்னை பெருநகர மாநகராட்சி வார்டு 66, மண்டலம் 6ல் அமைந்துள்ள வெங்கடேசன் சாலையை அங்கு வசிக்கும் நான்கு மனைதாரர்கள் 25 அடி முதல் 30 அடிவரை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இது குறித்து மாநகராட்சியில் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட வெங்கடேசன் சாலை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடத்தின் ஒரு பகுதியாகும். எனவே, குடிசை மாற்று வாரியத்தின் 4.3.2020 கடிதத்தின் மூலம் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றிட மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட வெங்கடேசன் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும், ஆக்கிரமிப்புகளை அகற்றாத மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 15.7.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ன் உதவி செயற்பொறியாளர் 17.08.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.**

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தன்னுடைய 04.03.2020 நாளிட்ட கடிதத்தில் 10,11 மற்றும் 12வது தெருவில் அமைந்துள்ள மனை எண்.1539,1561,1562 மற்றும் 1572 ஆகிய மனைதாரர்கள் வெங்கடேசன் சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் எனவும் சாலை ஆக்கிரமிப்பு குறித்து FMB வரைபடம் அயனாவரம் வட்டாட்சியரிடம் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். மேற்கண்ட வெங்கடேசன் சாலையின் எல்லைகளை வரையறை செய்து அறிக்கை அனுப்பும்படி 13.02.2020 அன்று அயனாவரம் தாசில்தார் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த நிலையில், 12.8.2023 அன்று அயனாவரம் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நினைவூட்டுக்களும் அனுப்பப்பட்டு, பதில் ஏதும் பெறப்படவில்லை. அறிக்கை பெறப்பட்டவுடன் காவல் துறை உதவியுடன் மேற்கண்ட ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பாக, மண்டல அலுவலர்-6 அவர்களின் 16.08.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**இந்நேர்வில், மனுதாரர் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரது வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.**

மனுதாரர். சென்னை பெருநகர மாநகராட்சி வார்டு 66, மண்டலம் 6, பகுதியில் வெங்கடேசன் சாலையை நான்கு மனைதாரர்கள் 25 அடி முதல் 30 அடி வரை 100 மீட்டர் தொலைவிற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ற்கு புகார் மனு அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்து தன் மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் குறிப்பிட்ட சாலை, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் ஒரு பகுதி என்பதும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 4.3.2020 நாளிட்ட கடிதத்தில் மேற்குறிப்பிட்ட சாலை அளவீடு செய்ததில் 10,11 மற்றும் 12வது தெருவில் அமைந்துள்ள மனை எண்.1539, 1561, 1562 மற்றும் 1572 ஆகிய மனைதாரர்கள் வெங்கடேசன் சாலையை ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர் எனவும், சாலை ஆக்கிரமிப்பு குறித்து FMB வரைபடம் அயனாவரம் வட்டாசியரிடம் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதும் அறியமுடிகிறது. மேலும் வெங்கடேசன் சாலையின் எல்லைகளை வரையரை செய்து அறிக்கை அனுப்பும்படி 13.2.2020 அன்று அயனாவரம் தாசில்தார் கேட்டுக்கொள்ளப்பட்டு, மீண்டும் 12.8.2023 அன்று நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது என்றும் அறிக்கை இதுவரை பெறப்படவில்லையெனவும், அறிக்கை பெறப்பட்ட பின்னர் காவல் துறை உதவியுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ன் உதவி செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் 2019 ஆண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ல் உள்ள வெங்கடேசன் சாலையை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று பலமுறை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ற்கு புகார் மனு அளித்தும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆக்கிரமிப்பை உறுதிப்படுத்தியும், எவ்வித நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6ன் அலுவலர்களின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும் சென்னை அயனாவரம் வட்டாட்சியருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6, 13.2.2020 அன்று வெங்கடேசன் சாலையை வரையறுக்கக் கோரி கடிதம் அனுப்பிவிட்டு 3½ வருட காலமாகியும் எவ்வித தொடர் நடவடிக்கையும் எடுக்காமல், இம்முறை மன்றம் மனுதாரரின் மனு மீது விசாரணைக்கு உத்திரவிட்ட பின்னர் 12.8.2023 அன்று சென்னை அயனாவரம் வட்டாட்சியருக்கு நினைவூட்டு கடிதம் அனுப்பி உள்ளது, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ல் உள்ள அலுவலர்கள் எவ்வளவு மெத்தனமாக செயல்படுகிறார்கள் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புவதுடன் இதனை வன்மையாகவும் கண்டிக்கிறது. இச்செயல் ஆக்கிரமிப்பாளர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் துணை போவதையே எடுத்துக்காட்டுகிறது.

4. 2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறை மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு

குறிப்பாக

<u>பிரிவு 7</u>. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely
(a) xx
(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

மற்றும்

பிரிவு 12 (I) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner, namely:-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for willful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x ன் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

5. மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி வார்டு 66, மண்டலம் - 6, வெங்கடேசன் சாலையில் நான்கு மனைதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என 2019 ஆண்டிலிருந்து புகார் மனு அளித்தும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பை உறுதி செய்தும், சென்னை பெருநகர மாநகராட்சி மண்டல துணை ஆணையர் அலுவலகத்தில் (Regional Deputy Commissioner) அவ்விடத்திற்கான வரைப்படம் மற்றும் அளவீடுகள் இருக்கும் போது, அயனாவரம் வட்டாட்சியருக்கு கடிதம் எழுதி நேரத்தை வீணடித்தது மட்டுமல்லாமல், இம்முறை மன்றத்தையும் திசைதிருப்பும் விதமாக அறிக்கையும், வாக்குமூலம் அளித்தது ஏற்க்கத்தக்கதல்ல. எனவே, 3½ ஆண்டுகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத முன்னாள் மற்றும் இன்னாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மண்டல துணை ஆணையர் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் மேலே குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

6. இந்நேர்வு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறை மன்றத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

The lethargic attitude of the zonal officials in this case is condemned by this Forum in strong terms. The Assistant Commissioner and his team of officials concerned have been sleeping for more than 3½ years without taking any worthwhile steps to recover the OSR land under the encroachment of some private individuals. Even after the Slum Clearance Board had written to the Greater Chennai Corporation Zonal Officials way back in 2020 dated 4.3.2020 the officials right from the Assistant Commissioner have hardly done anything to recover the land under the classification of road category under the encroachment and enjoyment of private individuals. Simply referring the matter to the Taluk Tahsildar Ayyanavaram for survey, FMB, etc is a clever-ploy to drag on the issue to the advantage of the encroachers and disabling the right of the Local Body, the Greater Chennai Corporation in

the matter. The Forum strongly feels it is beyond Comprehension that the Greater Chennai Corporation zone does not have basic survey records pertaining to their own lands like roads. It is understood the Regional Deputy Commissioner Office has survey records, maps etc. relating to OSR category of lands. What prevented the Assistant Commissioner from contacting the Revenue Divisional Officer of the area in person and getting hold of the records in a prompt manner instead of abetting this encroachment for more than 3½ years? The Forum directs the Greater Chennai Corporation Commissioner to ensure expeditious eviction of the encroachments as clearly reported by the Tamil Nadu Slum Clearance Board in 4 cases with plot numbers specifically stated within a period of 60 days from the date of issue of this order. Besides, the Forum is of the strong view that disciplinary action against the delinquents of Greater Chennai Corporation Zonal officials right from the Assistant Commissioner should be launched for their proven offence of prolonged inaction, collusion, disloyalty to the Greater Chennai Corporation, dereliction of duties apart from casual, come-what-may conduct. A copy of the order is marked to Hon'ble Chief Minister's office and Principal Secretary – MAWS Department in Government for information.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. வேணுகோபால்,
பிளாட் நெ.2, ஸ்ரீபாலாஜி பிளாட்ஸ்,
5வது தெரு, வி.வி.நகர், கொளத்தூர்,
சென்னை – 600 099.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
3. மண்டல அலுவலர்,
மண்டலம் – 6, பெருநகர சென்னை மாநகராட்சி,
158, ஸ்டராகான்ஸ் சாலை, பட்டாளம், சென்னை – 600 012.
4. கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
5. அரசு முதன்மை செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
6. முதலமைச்சர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்